# இராணிப்பேட்டை நகராட்சி
# நிர்வாக அறிக்கை
# 2016 – 2017

# இராணிப்பேட்டை நகராட்சி

## 2016—2017ஆம் ஆண்டின் நிர்வாக அறிக்கை
## (01.04.2016 முதல் 31.03.2017 முடிய)
## அமைப்பும் ஆளுமையும்

### 1. (அ)நகரின் வரலாறு

இராணிப்பேட்டை நகரம் நட்பு, கற்பு, வீரத்தின் அடையாளமாக உருவான வரலாறு. நண்பனுக்காக நவாப்பை எதிர்த்து போரிட்டு வீரமரணம் அடைந்த முஸ்லீம் தளபதி நண்பன் போர்க்களத்தில் மாண்டதை கண்டு தற்கொலை செய்து கொண்ட இந்து மன்னன், சாஸ்திரங்களின் கட்டுப்பாட்டால் ஒரு நாள் கூட சேர்ந்து வாழாதிருந்தும் கணவனுக்காக உடன்கட்டை ஏறிய கற்புக்கரசி ஆகியோரின் சரித்திர புகழ்பாடும் நகரமாகும். மராட்டிய மன்னன் வீர சிவாஜியின் மகன் ராஜாராமிடம் இருந்து செஞ்சிக் கோட்டையை கி.பி.1697ம் ஆண்டில் ஔரங்கசீப்பின் தளபதி ஜூல்பிகார்கான் என்பவர் போரிட்டு கைப்பற்றினார். பின்னர் செஞ்சிக் கோட்டையை சொருப்சிங் எனும் ராஜபுத்திர அரசனிடம் ஒப்படைத்தான். அப்போதைய ஆட்சி முறையின்படி, ஆற்காடு நவாப்புக்கு சொருப்சிங் கப்பம் செலுத்த வேண்டும். இந்த கப்பத்தை வசூலித்து டில்லிக்கு அனுப்பி வைக்க வேண்டியது நவாப்பின் பொறுப்பு. சொருப்சிங் ராணி ரமாபாய் தம்பதியரின் மகனாக பிறந்தார். தேஜ்சிங் எனும் தேசிங்கு, இளவரசன் தேசிங்கும் வழுதாவூர் பாளையக்காரர் மகன் மகமத்கானும் நண்பர்கள் இருவரும் இணைந்து டில்லி பாதுஷாவின் விருந்தினர்களாக சென்றனர். அங்கு யாராலும் அடக்க முடியாத பாராசாரி எனும் குதிரையை தேசிங்கு அடக்கினான். இதைக்கண்டு வியந்த பாதுஷா, இளவரசன் தேசிங்கு அடக்கிய குதிரையை அவனுக்கே பரிசாக கொடுத்தார். மேலும், பாதுஷாவின் தலைமை தளபதி பீம்சிங் என்பவர், தன்னுடைய மகள் ராணிபாயை தேசிங்குக்கு திருமணம் செய்து கொடுத்தார். ஆனால், ராணிபாய் குறிப்பிட்ட காலம் வரை தனிமையில் இருக்க வேண்டுமென ஜோதிடர்கள் அறிவுரையின் பேரில் ராணிபாய் செஞ்சிக்கோட்டையின் கன்னிமாடத்தில் குடி வைக்கப்பட்டார்.

இந்நிலையில் தேசிங்கின் தந்தை சொருப்சிங் இறந்துவிட்டதால், தேசிங்கு செஞ்சிக் கோட்டைக்கு ராஜாவாக முடிசூடிக் கொண்டார். மேலும், தனது தளபதியாக நண்பன் மகமத்கானை நியமித்தார். இதையடுத்து, டில்லி பேரரசுக்கு அடிமையாக வாழ பிடிக்காத ராஜாதேசிங்கு, கப்பம் கட்ட மறுத்தார். இதனால் கொதிப்படைந்த டில்லி பேரரசர், ராஜாதேசிங்கை பிடிக்கும்படி ஆற்காடு நவாப்புக்கு உத்தரவிட்டார். இதைத் தொடர்ந்து, ஆற்காடு நவாப்புக்கும், செஞ்சி மன்னனுக்கும் போர் முண்டது. தேசிங்கு ராஜா தன்னுடைய 22வது வயதில் 500 வீரர்கள் மற்றும் 350 குதிரைகள் கொண்ட படையை வழிநடத்தி நவாப்பின் 8 ஆயிரம் குதிரைப்படை மற்றும் 10 ஆயிரம் காலாட்படைகள் கொண்ட பெரும் சேனையை எதிர்த்து வீரமுடன் போரிட்டார். இதற்கிடையே, தேசிங்கின் தளபதி மகமத்கானை தன் பக்கம் இழுத்த நவாப் செய்த முயற்சி பலனளிக்கவில்லை. நண்பனுக்காக மரணமடைவேனே தவிர, உன்னிடம் வரமாட்டேன் என்று மகமத்கான் கூறிவிட்டான். அதேபோல, நவாப் படையை எதிர்த்து ஆக்ரோஷத்துடன் போரிட்டு களத்தில் வீர மரணமடைந்தான். நண்பன் மரணமடைந்ததை பார்த்த தேசிங்கும், துக்கம் தாளாமல் 1714ம் ஆண்டு அக்டோபர் 30ம் தேதி போர்க்களத்தில் தனது உடைவாளை மேல்நோக்கி வீசி, மார்பில் தாங்கி உயிர் துறந்தான்.

பட்டத்து ராணியான ராணிபாய் தனது குல வழக்கப்படி, கணவனின் சிதையுடன் உடன்கட்டை ஏறி அன்றே உயிர் விட்டாள். ராணியின் கற்பு, தேசிங்கின் வீரம், மகமத்கானின் நட்பு ஆகியவற்றை கண்டு வியந்த ஆற்காடு நவாப், ராஜா—ராணியின் அஸ்தியை கொண்டு வந்து ஆற்காடு அருகே பாலாற்றின் வடக்கே நினைவு மண்டபங்கள் கட்டினான். மேலும், ராணியின் நினைவாக ராணிப்பேட்டை எனும் நகரை இங்கு நிர்மாணித்தான். மேலும் மகமத்கானுக்கு செஞ்சி அருகே தேவனுரில் சங்கராபரணி ஆற்றங்கரையில் சமாதி அமைக்கப்பட்டது. ஆனாலும் ஒரு சிலர், தேசிங்கு ராஜாவின் நினைவுச் சின்னத்தின் நேர் எதிரில், பாலாற்றின் தெற்கு கூரையில் உள்ள சமாதிதான் மகமத்கானின் சமாதி என்றும் கூறுகின்றனர். கற்பு, வீரம், நட்பு ஆகியவற்றின் நினைவாக உருவானதுதான் ராணிப்பேட்டை எனும் சரித்திரப்புகழ் பெற்ற நகரம்.

## (ஆ)நகரின் அமைப்பு

இராணிப்பேட்டை நகரம் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறையின் 1.4.1959ம் தேதிய அரசாணை எண்.724ன் படி 1.4.1959ல் மூன்றாம் நிலை நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டது. பின்பு 5.10.1978ம் தேதிய அரசாணை எண் 1546ன் படி 5.10.1978 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாகவும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.5) துறையின் 22.5.98ம் தேதிய அரசு ஆணை(நிலை) எண்.85ல் முதல் நிலை நகராட்சியாகவும் தரம் உயர்த்தப்பட்டது. 2.12.2008—ந் தேதி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.283—ன்படி இராணிப்பேட்டை நகராட்சி முதல்நிலை நகராட்சியிலிருந்து தேர்வுநிலை நகராட்சியாக தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டது. 27.10.1959ம் தேதிய அரசாணை எண் 1366ன் படி இந்நகராட்சி 15 வட்டங்களாகவும் 2.12.67ந் தேதிய அரசு கடித எண்.7236/7—5 பொது தேர்தல் (1)ல் 19 வார்டுகளாகவும் பிரிக்க அனுமதிக்கப்பட்டது. 1969ம் ஆண்டில் நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் மேற்படி திருத்திய வட்டங்கள் அமுலுக்கு கொண்டுவரப்பட்டன.

பின்பு அரசு ஆணை எண்.2154, நாள் 10.10.1972ல் 20 வார்டுகளாக நிர்ணயம் செய்து உத்திரவிடப்பட்டது. 12.9.1973ம் தேதிய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை கடிதம் எண்.65724—ME—73—3ல்மேற்படி 20 வார்டுகளில் முதல் வார்டு பெண் உறுப்பினருக்கு என நிர்ணயம் செய்ததை இந்நகர்மன்ற தீர்மான எண் 153ல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன் பிறகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 20.9.90ம் தேதிய 872ம் எண்ணிட்ட அரசாணையில் இந்நகர் 28 வார்டுகளாகப் பிரித்து உத்திரவிடப்பட்டுள்ளது. இதில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 11.7.91ந் தேதிய 201ம் எண் அரசாணையின்படி 6,8,9,16,1,719,10,11 ஆகிய எட்டு வார்டுகளைத் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் 1,10,11,14,15,23,24 மற்றும் 28 ஆகிய எட்டு வார்டுகளைப் பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்து பிரேரணைகள் அரசுக்கு இவ்வலுவலக 9.1.1991ந் தேதிய ந.க.எண். 6893/90/சி2 எண் கடிதத்தில் அனுப்பப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் தனது 29.1.91ந் தேதிய ந.க.எண்.90443/90 தேர்தல்/2 கடிதத்தில் அரசுக்கு பரிந்துரைசெய்து அனுப்பியதன் பேரில், அரசு தனது 11.7.91ந் தேதிய நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 201ல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கீடு செய்ததை அங்கீகரித்துள்ளது. இந்நகரில் 1991ம் ஆண்டின் மக்கள் தொகை 42,583 ஆண்கள், 21,053 பெண்கள், 21530. தேல் தாழ்த்தப்பட்ட இனத்தவர் 12,442 தாழ்த்தப்பட்ட பழங்குடி இனத்தவர் 56, என இருந்தது அரசு ஆணை எண்.135 மற்றும்136 நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் துறை (நகர மன்ற தேர்தல்) நாள் 11.6.1996ல் இந்நகராட்சியை 30 வார்டுகளாக நிர்ணயம் செய்து உத்திரவிடப்பட்டது. இவற்றில் 9 வார்டுகள் தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கும், எட்டு வார்டுகள் பெண்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை 35,977. இதில் ஆண் வாக்காளர்கள் 17,715 பெண் வாக்காளர்கள் 18,262 ஆகும்.

## 2. அ) பரப்பளவு

31.03.2017 ஆம் தேதியில் இந்நகராட்சியின் பரப்பளவு 8.52 சதுரகிலோ மீட்டராகும். அறிக்கை ஆண்டில் நகரின் பரப்பளவின் எல்லையில் எந்த மாறுதலும் இல்லை.

ஆ). மக்கள் தொகை

1981 ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி இந்நகர மக்கள் தொகை 35,974 ஆகும். 1991ம் ஆண்டின் மக்கள் தொகை 42,583 ஆகும். 2001ம் ஆண்டின் மக்கள் தொகை 47,236 ஆகும். ஆண்கள் 23,026, பெண்கள் 24,210. மேலும் ஜனவரி 2011ம் ஆண்டின் மக்கள் தொகை 50764 ஆகும். இதில் ஆண்கள் 24278 பெண்களை 26486 ஆகும்.

இ). நகரமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை

நகரமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மொத்தம் 30.

ஈ). நகராட்சி நிலை

22.5.98ல் முதல் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டது. தற்போது 2.12.2008—ந் தேதி முதல் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.283 நாள்:2.12.2008—ன்படி தேர்வுநிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

## 3. நகரமன்றம்

17.10.2011 அன்று இந்நகர்மன்றத்திற்கு தேர்தல் நடைபெற்றது. நகரமன்ற தலைவர் பதவிக்கு ஆதி திராவிடர் வகுப்பில் பெண் உறுப்பினரை நகரமன்ற தலைவர் பதவிக்கு போட்டியிட ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும் நகரமன்ற உறுப்பினர் பதவிக்கு மொத்தம் 30 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதில் 14 வார்டுகள் பொது, 6 வார்டுகள் ஆதிதிராவிடர் பொது, 3 வார்டுகள் ஆதிதிராவிடர் பெண்கள், 7 வார்டுகள் பெண்கள் கீழ்கண்ட விவரப்படி 25.10.2011 அன்று அனைவரும் பதவியேற்றனர்.

| | | |
|---|---|---|
| திருமதி.எஸ்.சித்ரா சந்தோஷம் | ... | நகர்மன்ற தலைவர் |
| திரு. ஆ.மணிகண்டபிரபு | ... | நியமனக்குழு உறுப்பினர் |
| திருமதி.எம்.ஜூலைகாபீ | ... | ஒப்பந்த குழு உறுப்பினர் |

வரி மேல்முறையீட்டுக்குழு உறுப்பினர்கள்

1. திருமதி. என்.மணிமேகலை
2. திருமதி. எஸ்.புவனேஸ்வரி
3. திருமதி. ஜோதி சேதுராமன்
4. திரு. எஸ்.தாவூத்பாஷா

அறிக்கையாண்டில் **திரு.ஆர்.ஷாபுதீன்** என்பவர் நகரமன்ற துணைத் தலைவராக பதவி வகித்து வந்துள்ளார்.

நிர்வாக அறிக்கையாண்டில் **திருமதி.செ.பாரிஜாதம்,பி,பார்ம்.,எம்.பி,ஏ.,** 01.04.2016 முதல் 31.03.2017 வரை நகராட்சி ஆணையாளராக பணிபுரிந்து வந்துள்ளார்.

## நகரமன்றம்

திருமதி.எஸ்.சித்ரா சந்தோஷம் ... நகர்மன்ற தலைவர்
திரு.ஆர்.ஷாபுதீன் (1—வது வார்டு) ... நகர்மன்ற துணைத் தலைவர்

நகர்மன்ற உறுப்பினர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர். ஷாபுதீன்<br>1-வது வார்டு | 16 | திரு.எஸ்லி டேனியல் குமார்<br>16-வது வார்டு |
| 2 | திருமதி.என்.மணிமேகலை<br>2-வது வார்டு | 17 | திரு.பெ. முருகேசன்<br>17-வது வார்டு |
| 3 | திரு.ஆர்.இ.எழில்வாணன்<br>3-வது வார்டு | 18 | திரு.கே.பி.சந்தோஷம்<br>18-வது வார்டு |
| 4 | திரு.ஏ.ரகுநாதன்<br>4-வது வார்டு | 19 | திரு.ஜி.அன்பழகன்<br>19-வது வார்டு |
| 5 | திரு.ஏ.மணிகண்டபிரபு<br>5-வது வார்டு | 20 | திரு.ஏ.ரவி<br>20-வது வார்டு |
| 6 | திரு.டி.ராமதாஸ்<br>6-வது வார்டு | 21 | திரு.என்.ராஜ்குமார்<br>21-வது வார்டு |
| 7 | திரு.ஜி.தாமோதரன்<br>7-வது வார்டு | 22 | திரு.ஜெ.பி.சேகர்<br>22-வது வார்டு |
| 8 | திருமதி.பி.விமலா<br>8-வது வார்டு | 23 | திரு.இசட்.அப்துல்லா<br>23-வது வார்டு |
| 9 | திருமதி.வி.இந்துமதி<br>9-வது வார்டு | 24 | திருமதி.டி.கீதா<br>24-வது வார்டு |
| 10 | திரு.ம.கருணாமூர்த்தி<br>10-வது வார்டு | 25 | திருமதி.எஸ்.ஜோதி சேதுராமன்<br>25-வது வார்டு |
| 11 | திரு.டி.ராதாகிருஷ்ணன்<br>11-வது வார்டு | 26 | திருமதி.ஏ.மேனகா<br>26-வது வார்டு |
| 12 | செல்வி.எஸ்.ராஜலட்சுமி<br>12-வது வார்டு | 27 | திருமதி.எஸ்.புவனேஸ்வரி<br>27-வது வார்டு |
| 13 | திருமதி.ஆர்.நிர்மலா<br>13-வது வார்டு | 28 | திரு.இ.சரவணன்<br>28-வது வார்டு |
| 14 | திருமதி.எஸ்.நந்தினி<br>14-வது வார்டு | 29 | திருமதி.ஜூலைக்காபி<br>29-வது வார்டு |
| 15 | திரு.எஸ்.வினோத்<br>15-வது வார்டு | | திரு.எஸ்.தாவுத்பாஷா<br>30-வது வார்டு |

**4. தேர்தல்கள்**

17.10.2011—ல் உள்ளாட்சி தேர்தல் நடைபெற்றது

**5. கூட்டங்கள்**

1. நிர்வாக அறிக்கையாண்டில் நடைபெற்ற மன்றக் கூட்டங்களின் விவரம் கீழ்வருமாறு

2016—2017

| | | | |
|---|---|---|---|
| 1. | சாதாரணக்கூட்டங்கள் | .. | 10 |
| 2. | அவசரக் கூட்டங்கள் | .. | 2 |
| 3. | சிறப்புக் கூட்டங்கள் | .. | — |
| 4. | கோரிக்கை கூட்டங்கள் | .. | — |
| | | .. | 12 |

2).நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்ட பொருட்கள் அனைத்தும் அவ்வப்போதே அங்கீரிக்கப்பட்டன. அறிக்கையாண்டில் 456 பொருள்கள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்பட்டு அனைத்தும் அங்கீரிக்கப்பட்டன.

**6). குழுக்கள்**

அறிக்கையாண்டில் நடைபெற்ற நகராட்சி குழுக்களின் கூட்டங்களிலும் மற்றும் முடிவு செய்யப்பட்ட பொருட்களும் கீழ்வருமாறு.

2016—2017

அ). வரி மேல்முறையீட்டுக்குழு கூட்டங்கள்

| | |
|---|---|
| மேற்படி கூட்டங்களில் வைக்கப்பட்ட பொருட்களின் | —— |
| எண்ணிக்கை முடிவு செய்யப்பட்ட எண்ணிக்கையும் | —— |

ஆ). உள்ளூர் திட்டக் குழுமம் கூட்டங்கள்

| | |
|---|---|
| மேற்படி கூட்டங்களில் வைக்கப்பட்ட பொருட்கள் மற்றும் முடிவு செய்யப்பட்டவை | —— |

2016—2017

இ). நியமனக்குழுக் கூட்டங்கள்

| | |
|---|---|
| வைக்கப்பட்ட பொருட்கள் மற்றும் முடிவு செய்யப்பட்டவை | —— |

ஈ). ஒப்பந்தக்குழு கூட்டங்கள்

| | |
|---|---|
| வைக்கப்பட்ட பொருட்கள் மற்றும் முடிவு செய்யப்பட்டவை | —— |

**7. மேலாண்மை**

அறிக்கையாண்டில் கீழ்க்கண்ட பணியிடங்கள் இந்நகராட்சியில் செயல்பட்டன.

| | |
|---|---|
| 1.மேலாளர் | 1 |
| 2.உதவியாளர் | 1 |
| 3. கணக்கர் (உதவியாளர்) | 1 |
| 4. இளநிலை உதவியாளர் | 8 |
| 5. தட்டச்சர் | 1 |
| 6. பதிவறை எழுத்தர் | 2 |
| 7. அலுவலக உதவியாளர்கள் | 3 |
| 8. இரவு காவலர் | 1 |
| 9. உதவி திட்ட அமைப்பாளர் | 1 |
| 10. ஓட்டுநர் | 2 |

மேற்கண்ட பணியிடங்களுக்கு நடப்பாண்டில் ஊதியம் மற்றும் இதர செலவினங்களுக்காக ரூ. 52,12,948/— செலவிடப்பட்டுள்ளது.

ஆளுமை

வருவாய் பிரிவில் வருவாய் ஆய்வர் மற்றும் 6 வருவாய் உதவியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். வரி வசூல் துறை இனத்தில் ஏற்பட்ட செலவு விவரம் இணைப்பில் கொடுக்கப் பட்டுள்ளது. அறிக்கையாண்டில் கோவையில் இயங்கிவரும் நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு பங்கு தொகை ரூ.90,000/— செலுத்தப்பட்டுள்ளது. மேலும் வருவாய் பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் இதர செலவினங்களுக்காக ரூ.19,24,143/— செலவிடப்பட்டுள்ளது.

முறையீடு

அறிக்கையாண்டில் ஊழியர்கள்மீது முறையீட்டுக்குரிய தண்டனை ஏதும் அளிக்கப்படவில்லை.

இடவசதி

பிரதான அலுவலகத்தின் இடவசதி போதுமானது. மேலும் ரூ.300.00 லட்சத்தில் புதிய நகரமன்ற கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு 08.06.2015 அன்று முதல் உபயோகத்தில் இருந்து வருகிறது.

அச்சடித்தல்

அறிக்கையாண்டில் இவ்வினத்தின் கீழ் செலவு செய்யப்பட்ட விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

வழக்குகளும் அதற்கான கட்டணங்களும்

வழக்கின்மேல் நிறைவேற்றப்படும் விண்ணப்பங்களை தாக்கல் செய்து அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அரசு வழக்கறிஞர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

## தொடர்புகள்

ஆளுகை

1) அறிக்கையாண்டில் திரு.த.ராஜவிஜயகாமராஜ் 01.04.2015 முதல் 31.03.2016 வரை நகராட்சி பொறியாளராக பணியாற்றி உள்ளார்.

2) அறிக்கையாண்டில திருமதி.டி.உஷாராணி01.04.2015 முதல் 31.3.2016 வரை உதவி பொறியாளராக பணியாற்றி உள்ளார்.

மேலும் நகராட்சி பொறியாளர், உதவி பொறியாளர் உட்பட 22 பணியாளர்கள் பொறியியல், தெருவிளக்கு மற்றும் குடிநீர் பிரிவில் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்களுக்கு நடப்பாண்டில் ஊதியம் மற்றும் இதர செலவினஙளுக்காக ரூ.42,61,233/— செலவிடப்பட்டுள்ளது.

## 8. சாலைகள், பாலங்கள் மற்றும் கட்டிடங்கள்

அ). சாலைகள்

கான்கிரீட் சாலை, தார்சாலை, கற்சாலை மற்றும் மண் சாலை போன்ற நான்கு சாலைகள் உள்ளன. நகராட்சியால் கீழக்கண்ட சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அறிக்கை ஆண்டில் லே அவுட் மூலமாக 3.5000 கி.மீட்டர் சாலை நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

| | | **31.03.2016** | **31.03.2017** |
|---|---|---|---|
| 1. | கான்கிரீட் சாலை | 35.072 | 39.882 |
| 2. | தார்சாலை | 23.860 | 19.050 |
| 3. | கற்சாலை | —— | —— |
| 4. | மண் சாலை | 3.252 | 3.252 |
| | | 62.184 | 62.184 |

நகராட்சி எல்லைக்குள் தேசிய நெடுஞ்சாலை துறையினரால் கீழ்க்கண்ட தேசீய நெடுஞ்சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

1. சென்னை / மும்பை நெடுஞ்சாலை
2. சென்னை / கிருஷ்ணகிரி நெடுஞ்சாலை இவற்றின் நீளம் 68.39 கி.மீ

இவைகள் அல்லாமல் மாநில நெடுஞ்சாலைத் துறையினரால் கீழ்க்கண்ட சாலைகள் பராமரிக்கப் பட்டு வருகின்றன.

1. திருத்தணி சாலை
2. ஆர்.ஆர். சாலை
3. கெல்லீஸ் சாலை இவைகளின் நீளம் 8.52 கி.மீ ஆகும்.

இந்நகராட்சிக்கு சொந்தமான அனைத்து சாலைகளும் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அறிக்கையாண்டில் செலவு செய்யப்பட்ட விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

நீராவி உருளை மற்றும் சாலை செப்பனிடும் உருளை ஏதும் இந்நகராட்சியில் இல்லை.

ஆ) சிறுபாலங்கள்

இத்தலைப்பின் கீழ் அறிக்கையாண்டில் செலவு செய்யப்பட்ட விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

இ. நகராட்சிக்கட்டிடங்கள்
கீழே குறிப்பிட்டுள்ள கட்டிடங்கள் நகராட்சிக்கு சொந்தமானவை.

| | | |
|---|---|---|
| நகராட்சி அலுவலகம் | : | இரயில்வே ஸ்டேஷன் ரோடு |
| நகராட்சி ஆயுர்வேத மருந்தகம் | : | வண்டிமேட்டுத் தெரு |
| நகராட்சி ஆயுர்வேத மருந்தகம் | : | காரை |
| நகராட்சி மகப்பேறு மருத்துவ மனை | : | வண்டிமேட்டுத் தெரு |
| நகராட்சி நடுநிலைப்பள்ளி | : | பஜனைக் கோயில் தெரு காரை |
| நகராட்சி நடுநிலைப்பள்ளி | : | சீனிவாசன்பேட்டை |
| நகராட்சி முஸ்லீம்பெண்கள் பள்ளி | : | ஆர்.ஆர்.ரோடு |

**நகராட்சி தினசரி கடைகள்**

| | | |
|---|---|---|
| RMS இராஜன் கட்டிடம் | : | 6 கடைகள் |
| அம்பேத்கர் அங்காடி | : | 6 கடைகள் |
| முத்துக்கடை ஸ்டால்கள் | : | 6 கடைகள் |
| ஆடு அறுக்கும் தொட்டி | : | 1 |
| நகராட்சி குடியிருப்பு வீடுகள் | : | 7 (RR ரோடு 7, வண்டிமேட்டுத் தெரு1) |
| ஆணையாளர் குடியிருப்பு கட்டிடம் | : | 1 இரயில்வே ஸ்டேஷன் ரோடு |
| பொறியாளர் குடியிருப்பு கட்டிடம் | : | 1 இரயில்வே ஸ்டேஷன் ரோடு (இவை இரண்டும் பழுதடைந்துள்ளன). |
| துப்புரவு பணியாளர்கள் குடியிருப்பு குடியிருப்புகள் | : | 9 பிளாக்குள் (9X2=18) |
| SM மருத்துவ மனை எதிரில் | : | 5 கடைகள் |
| வாரச்சந்தை அருகில் | : | 5 கடைகள் |
| நகராட்சி பங்குகள் | : | 10 |

**IUDP திட்டத்தில் கட்டப்பட்ட கடைகள்**

| | | |
|---|---|---|
| RR ரோடு | : | 11 கடைகள் |
| திருமண மண்டபம் | : | 1 |
| முத்துக்கடை சந்திப்பு திறந்தவெளி கடைகள் | . | 30 |
| உழவர் சந்தை அடுத்த வாரச்சந்தை ஒட்டினார்போல் உள்ள காலிமனை எண் | . | 12 |
| ஆர்.ஆர்.ரோடு வணிக வளாக கடை தரைதளம் மற்றும் முதல் தள கடைகளின் எண்ணிக்கை | : | 14 கடைகள் |
| மட்டன் மற்றும் சிக்கன் இறைச்சி கடைகள் எண்ணிக்கை | : | 31 கடைகள் |
| வண்டிமேட்டுத்தெரு வணிக வளாகம் தரை தள கடைகளின் எண்ணிக்கை | : | 16 கடைகள் |

**IDSMT திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட கடைகள்**

| | | |
|---|---|---|
| புதிய பஸ் நிலையத்தில் கட்டண கழிப்பிட கட்டிடம் | : | 1 |
| அம்மூர் ரோடு | : | 5 கடைகள் |
| வண்டிமேட்டுத் தெருவில் | : | 12 கடைகள் |
| புதிய பஸ் நிலையம் | : | 19 கடைகள் |
| MBT ரோடு | : | 15 கடைகள் |
| MBT ரோடு | : | 1 குடோன் |
| MBT ரோடு | | 60 லாரி புக்கிங் அலுவலகம் |
| | : | 1 உணவகம் |
| | : | 1 சர்வீஸ் ஸ்டேஷன் |
| | : | 1 காற்று பிடிக்கும் (ம) கிரீஸ் பேக்கிங் யூனிட் |
| | : | 1 பழைய அலுவலக கட்டடிம் |
| முத்துக்கடை பகுதியில் கட்டண கழிப்பிட கட்டிடம் | : | 1 |
| திறந்த வெளி குடோன் | : | 5 |

**MUDF திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட கடைகள்**

| | | |
|---|---|---|
| MBT சாலையில் (ஆடு தொட்டி) | : | 30 கடைகள் |
| அம்மூர் சாலையில் வணிக வளாகம் | : | 18 கடைகள் |
| MBT சாலையில் முதல் தளம் | : | 12 கடைகள் |
| MBT சாலையில் மேல் உள்ள கடை | : | 1 கடை |

**சந்தை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட கடைகள்**

| | | |
|---|---|---|
| 1. வாரசந்தை கடைகள் | : | 15 கடைகள் |
| 2. தினசரி சந்தை கடைகள் | : | 20 கடைகள் |
| 3. பெரியார் மார்க்கெட் கடைகள் | : | 8 கடைகள |

**நகர்ப்புற வளர்ச்சி திட்டம்.**

இத்திட்டத்தில் அறிக்கையாண்டில் பணிகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை

**9. தங்குமிடம், சத்திரம் மற்றும் தண்ணீர் பந்தல்**

நகராட்சியால் தங்குமிடங்கள் ஏதும் பராமரிக்கப்படவில்லை ஆனால் பொதுப்பணி துறையினரால் பராமரிக்கப்டும் தங்குமிடம் ஒன்று நகராட்சி எல்லைக்குள் உள்ளது.

சத்திரங்கள் நகராட்சியால் ஏதும் பராமரிக்கப்படவில்லை. மேலும் அறிக்கையாண்டில் கோடைகாலத்தில் பொதுமக்கள் அதிகம் நடமாட்டம் உள்ள இடத்தில் நகராட்சியால் தண்ணீர் பந்தல் அமைக்கப்பட்டது.

## 10 தெருவிளக்குகள்

அறிக்கையாண்டில் (31.03.2017) கீழ்கண்ட விவரப்படி தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1) 4 அடி குழல் விளக்குகள் | – 1353 | எண்ணிக்கை |
| 2) 250 W சோடியம் ஆவி விளக்குகள் | – 356 | எண்ணிக்கை |
| 3) 105 w CFL | – 150 | எண்ணிக்கை |
| 4) 85 w CFL | – 32 | எண்ணிக்கை |
| 5) 72 w CFL | – 60 | எண்ணிக்கை |
| 6) 45 w CFL | – 145 | எண்ணிக்கை |
| 7) 400 வாட்ஸ் உயர்கோபுர மின்விளக்குகள் | – 73 | எண்ணிக்கை |
| 8) 250 வாட்ஸ் உயர்கோபுர மின்விளக்குகள் | – 28 | எண்ணிக்கை |
| மொத்தம் | 2197 | |

இத்தலைப்பின் கீழ் அறிக்கையாண்டில் செலவு செய்யப்பட்ட விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1) தெருவிளக்கு பராமரிப்பிற்கென மின்சாதனப் பொருட்கள் வாங்கியது | **ஏதும் இல்லை** |
| 2. அறிக்கை ஆண்டில் தெருவிளக்கு பராமரிப்பு தனியார் மயம் செலவினம் | ரூ.13.56 **இலட்சம்** |

## (கல்வி) ஆரம்பக் கல்வி

## 11. கல்வி வசதிகள்

நகர எல்லைக்குள் 17 பள்ளிக்கூடங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் 4 நகராட்சியால் 31.3.90 முடிய பராமரிக்கப்பட்டு வந்தது. பின் 1.4.90 முதல் இப்பள்ளிக்கூடங்கள் கல்வித் துறைக்கு மாற்றப்பட்டு, ஊதியங்கள் கல்வித் துறையினரால் வழங்கப்பட்டு வருகின்றது.

## 12. நகராட்சிப்பள்ளிக்கூடங்கள்

தற்போது நகராட்சியின் கட்டுப்பாட்டில் கீழ்க்கண்ட நான்கு பள்ளிக்கூடங்கள் உள்ளன

1. சீனிவாசன் பேட்டை நகராட்சி நடுநிலைப்பள்ளி.
2. காரை நகராட்சி நடுநிலைப்பள்ளி.
3. நகராட்சி முஸ்லீம் பெண்கள் ஆரம்பப்பள்ளி.
4. நகராட்சி முஸ்லீம் ஆண்கள் ஆரம்பப்பள்ளி.

இதில் உள்ள ஆசிரியர்களின் ஊதியங்கள் கல்வித்துறையால் வழங்கப்பட்டுவருகின்றன. கட்டிடங்கள் மட்டும் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

## 13. சிப்பந்திகள்

31.10.90 முதல் நகராட்சி பள்ளிகளில் பணிபுரிந்த சிப்பந்திகள் அனைவரும் அரசினரால் 1.4.90 முதல் எடுத்துக்கொள்ளப்பட்டு அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியங்கள் அரசால் வழங்கப்பட்டு வருகின்றது.

**14. இடவசதியும் தளவாடங்களும்**

நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் 4 பள்ளிகளும் சொந்த கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. போதுமான விளையாட்டு மைதானங்கள் எந்த பள்ளிக்கும் இல்லை. விளையாட்டு மைதானங்களுக்கு இடங்கள் வாங்க வேண்டி உள்ளது.தற்போது பள்ளிகளில் உள்ள காலி இடங்கள் விளையாட்டு மைதானமாக உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது. எல்லா பள்ளிகளுக்கும் போதுமான வெளிச்சமும் காற்றுவசதியும் உள்ளது.

**15. ஆரம்பக் கல்வி நிதி**

அறிக்கையாண்டில் இத்தலைப்பின் கீழ் செலவு செய்யப்பட்ட விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

**இடைநிலைக் கல்வி**

**16. இடவசதியும், எண்ணிக்கையும்**

இந்நகரில் இரண்டு மேல்நிலைப்பள்ளிகள் அரசாலும் இரண்டு மேல்நிலைப் பள்ளிகள் தனியாராலும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**17. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம்**

இந்நகராட்சி நிர்வாகத்தின் கீழ் 4 பள்ளி சத்துணவு மையங்கள் மட்டும் செயல் பட்டு வருகின்றன. இம்மையங்களில் தினமும் 264 மாணவ மாணவிகள் உணவு உட்கொள்கின்றனர். அன்றாட சத்துணவிற்கு வாலாஜா சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கென இந்நகராட்சியில் சத்துணவு உதவியாளர் மற்றும் கணக்கர் – 1 2 அமைப்பாளர்கள், 1 சமையல்காரர் மற்றும் 3 உதவியாளர்கள் பணியாற்றுகின்றனர் பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் மதிய உணவிற்கான செலவும் சேர்த்து அறிக்கையாண்டில் ரூ.9,48,443/– செலவு செய்யப் பட்டுள்ளது. இது அரசு அனுமதிக்கும் மானியத் தொகையிலிருந்து செலவிடப் படுகிறது.இந்நகராட்சி நிர்வாகத்தின் கீழ் செயல்பட்ட 15 குழந்தைகள் நலமையங்கள் 15.10.97 முதல் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் கீழ் (ICDS) கொண்டு செல்லப்பட்டது.

**18. பொது நூலகங்கள்**

இந்நகராட்சியால் நூலகங்கள் ஏதும் பராமரிக்கப்படவில்லை ஆனால் மாவட்ட நூலகம் ஆணைக்குழுவால் ஒரு கிளை நூலகம் இந்நகரத்தில் நடத்தப்பட்டு வருகிறது.

**19. பொது வானொலி**

பொது வானொலி எதுவும் பராமரிப்பில் இல்லை

## பொது சுகாதாரம்

### 20. மருத்துவ மனைகள்

நகரில் SM மருத்துவமனை என்ற பெயரில் தனியார் மருத்துவமனை ஒன்று இயங்கி வருகின்றது.மேற்படி மருத்துவமனை மருத்துவ கண்காணிப்பாளரின் கீழ் தொழுநோய் நிவாரண கழகம் ஒன்று இயங்கி வருகின்றது. இக்கழகம் வாலாஜா தாலுக்காவில் உள்ள தொழுநோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வருகின்றது.
கிராமத்தில் உள்ள தொழுநோய் கண்டவர்களுக்கு இலவசமாக மாத்திரைகளும் மருத்து உதவியுடன் இளம்பிள்ளைவாத நோய் கண்ட பிள்ளைகள் நலனுக்காக காப்பகம் ஒன்றும் இம்மருத்துவ மனையில் தனியாக இயங்கி வருகின்றது. இது நகராட்சியின் கட்டுப்பாட்டில் இல்லை.

நகராட்சி இரண்டு ஆயுர்வேத மருந்தகங்களைப் பராமரித்து வருகிறது. இதில் ஒன்று காரையிலும், மற்றொன்று இராணிப்பேட்டையிலும் உள்ளது. இம்மருந்தகங்களில் மருத்துவ அதிகாரி இருவரும் ஒரு ஆண் செவிலியரும் பணிபுரிகின்றனர். இரு மருந்தகங்களிலும் பெண்களுக்கென்றும் குழந்தைகளுக்கென்றும் தனிப்பட்ட சிறப்பு மருத்துவ வசதிகள் இன்னும் செய்யப்படவில்லை. இரு மருந்தகங்களிலும் ஏனைய மருத்துவ வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மருந்துகள் நகராட்சியால் விலைக்கு வாங்கப்பட்டு நோயாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மருந்தக பணியாளர்களுக்கு நடப்பாண்டில் ரூ.23,27,975/— செலவிடப்பட்டுள்ளது.

### 21. நோயாளிகள்

புதிய பேருந்து நிலைய ஆயுர்வேத மருந்தகத்தில் மட்டும் **33947** நோயாளிகளுக்கு அறிக்கை ஆண்டில் சிகிச்சை அளிக்கப்பட்டது முந்தைய ஆண்டில் **25818** நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

### 22. இடவசதியும் கருவிகளும்

காரை ஆயுர்வேத மருத்துமனை மற்றும் இராணிப்பேட்டை ஆயுர்வேத மருந்தகம் நகராட்சியின் சொந்த கட்டிடத்தில் இயங்கி வருகின்றன. காரை ஆயுர்வேத மருத்துமனையில **33553** நோயாளிகளுக்கு அறிக்கை ஆண்டில் சிகிச்சை அளிக்கப்பட்டது முந்தைய ஆண்டில் **22908** நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

### 23. நிறுவனமும், சிப்பந்திகளும்

இந்நகராட்சியில் துப்புரவு அலுவலர் பதவி 18.6.90 முதல் தோற்றுவிக்கப்பட்டது. துப்புரவு அலுவலர் பணியிடம் காலியாக இருந்து வருகிறது. 2 துப்புரவு ஆய்வர்கள் பணிபுரிந்து வருகின்றார்கள். துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் 6 நபர்களும், ஓட்டுநர் 3 நபர்கள் மற்றும் 91 துப்புரவு பணியாளர்கள் பணி செய்து வருகிறார்கள். மேற்கண்ட பணியாளர்களின் ஊதியத்திற்காக அறிக்கையாண்டில் **ரூ.2,88,25,245/—** செலவிடப்பட்டுள்ளது.

### 24. குடும்ப நல பிரசாரம்

சுகாதாரம் சம்மந்தமான விவரங்கள் மக்களுக்கு பிரச்சாரம் செய்யப்பட்டது. சுகாதாரம் மற்றும் குடும்ப நல வசதி நிலையம் இந்நகரில் இல்லை. அறிக்கையாண்டில் குடும்ப வார விழாக்கள் கொண்டாடப்பட்டன. அறிக்கையாண்டில் குடும்ப கட்டுபாடு குறித்து அடைந்த இலக்கீடு விவரம் கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

## 2016-2017

| | | |
|---|---|---|
| P.S | .. | 148 |
| I .D – I.U.D | .. | 43 |
| O. P | .. | 200 |
| C. C. users | .. | 3000 |

இத்திட்டத்தின் கீழ் ஒரு மருத்துவ அலுவலரும் ஒரு நலப்பார்வையாளரும் பணியாற்றுகின்றனர். அறிக்கையாண்டில் **ரூ.1683046/—** செலவிடப்பட்டுள்ளது.

### 25. தடுப்பு ஊசி திட்டம்

இந்நகராட்சியில் 2016—2017 ஆம் ஆண்டில் 6213 குழந்தைகளுக்கு டி.டி.எம். டிபிடி, தட்டம்மை, ஓபிவி, போலியோ சொட்டு மருந்து கொடுக்கப்பட்டது.

2015—2016

| | |
|---|---|
| டி.டி(எம்.) | 740 |
| பி.சி.ஜி | 635 |
| Pentavalat | 633 |
| ஓ.பி. வி | 633 |
| தட்டம்மை | 672 |
| டி.டி.(5—6) | 818 |
| டி.டி(10 வயது) | 812 |
| டி.டி.(16 வயது) | 791 |
| மஞ்சள்காமாலை ஊசி | 633 |
| DPT Booster | 675 |

PPI

| | | |
|---|---|---|
| ஆண்கள் | : | 3127 |
| பெண்கள் | : | 3086 |
| மொத்தம் | | 6213 |

அறிக்கையாண்டில் பள்ளி நலம் (வாழ்வொளி திட்டம்) திட்டத்தில் 2015—2016—ல் 13706 குழந்தைகள் பயனடைந்தனர். பல்ஸ் போலியோ திட்டத்தின் கீழ் 6213 குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்கப்பட்டது. மேலும் வைட்டமின் ‘A’ திரவ மாத்திரைகள் 6 மாதம் முதல் 5 வயது வரை உள்ள 4218 குழந்தைகளுக்கு வழங்கப்பட்டன. இரும்பு சத்து மாத்திரைகள் (IFA) 3275 வளர் இளம் பெண்களுக்கு வழங்கப்பட்டன. 1322 கர்ப்பிணி பெண்களுக்கு இரும்பு சத்து மாத்திரைகள் FST(L) வழங்கப்பட்டன. மேலும் 2325 பெண்களுக்கு (தாய்மார்கள், காப்பர் டி போட்டவர்கள், அறுவை சிகிச்சை செய்தவர்கள்) FST மருந்துகள் கொடுக்கப்பட்டன. டி.பி.மாத்திரை சாப்பிட்டநபர்கள் 8 பேர். தொழு நோய் மாத்திரைகள் சாப்பிட்டவர்கள் எவரும் இல்லை.

இந்நகரின் எல்லைக்குள் மாவட்ட குடும்ப நலத் திட்டத்தின் கீழ் 30 வார்டுகளிலும் 30பணிக்குழு அமைக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவிலும் 10க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் உள்ளனர். இவர்கள் மூலம் தாய், சேய் நலம் மற்றும் மருத்துவம் சம்மந்தமான பொது சுகாதாரப்பணிகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

### 26. பிறப்பு விகிதமும், தாய்சேய் நல வசதியும்

அறிக்கையாண்டில் 915 பிறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சென்ற ஆண்டில் பதிவு செய்யப்பட்ட பிறப்புகள் 977 ஆகும். தாய்சேய் நலவிடுதியில் இரு பெண் மருத்துவ அதிகாரியும்,1 மகப்பேறு உதவியாளரும், 3 ஆயாக்களும் மற்றும் ஒரு துப்புரவு பணியாளரும் பணிபுரிகின்றனர். மகப்பேறு உதவியாளர்களால் அறிக்கையாண்டில் 145 தாய்மார்களுக்கு பிரசவம் பார்க்கப்பட்டது. இதைத்தவிர ஸ்கடர் நினைவு மருத்துவ மனையிலும் டாக்டர் கார்த்திகேயன் மருத்துவ மனையிலும் மற்றும் ரூபா நர்சிங் ஹோமிலும் பார்க்கப்பட்ட பிரசவங்களின் எண்ணிக்கை 210 ஆகும்.

தாய்சேய் நலமையத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு நடப்பாண்டில் ஊதியமாக ரூ.27,38,359/— செலவிடப்பட்டுள்ளது.

## 27. இறப்பு விகிதமும், கொள்ளை நோயும்

இவ்வாண்டு 381 மரணம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இறப்பு விகிதம் 7.9% சென்ற ஆண்டு மரணம் 395 இறப்பு விகிதம் 0.4% இவ்வாண்டில் இந்நகரில் தொற்றுநோய் பாதிப்புக்கானஅறிவிப்பு ஏதும் செய்யப்படவில்லை.

### அம்மை

இவ்வாண்டில் அம்மை நோயினால் இறந்தவர்கள் யாரும் இல்லை.

## 28. துப்புரவு

### (அ) சுகாதாரம்

நகரிலுள்ள குப்பைகளை அப்புறப்படுத்தும் வேலையும், தெருக்களைக் கூட்டும் வேலையும், பொது சுகாதார ஊழியர்களால் மேற் கொள்ளப்பட்டது. இந்நகராட்சியால் 15 நவீன கழிப்பிடங்கள் மற்றும் 5 ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்களை ஒப்பந்த அடிப்படையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. அறிக்கை ஆண்டில் வரவு செலவு செய்யப்பட்ட விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சியால் ஒரு மினி லாரி, இரண்டு டிராக்டர் மற்றும் டிரெய்லர்கள் மற்றும் 6 ஆட்டோ டிப்பர் ஆட்டோக்கள் மூலம் குப்பை அகற்றும் பணியில் உபயேகாப்படுத்தப்பட்டு வருகின்றன. பொது சுகாதார கழிப்பிடங்கள் 20, கட்டண கழிப்பிடம்2, ஆக மொத்தம் 22 கழிப்பிடங்கள் இந்நகரில் இந்நகராட்சியால் தூய்மையாக பராமரிக்கப்பட்டு வருகின்றன. அனைத்து வீடுகளிலும் கழிப்பிடங்கள் அமைக்க பொது சுகாதார சட்டப்பரிவு 39ன் படி அறிவிப்புகள் கொடுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பொதுக்கழிப்பிடங்களில் கட்டணம் பெறாமல் 22 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமித்து தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### அபாயகரமானது மற்றும் அருவருக்கத்தக்க தொழில்கள்

அபாயகரமானது மற்றும் அருவருக்கத்தக்க தொழில்கள் அனைத்தும் உரிமை ஆணை பெற்று நடத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் பிரிவு 249ன் கீழ் இ.ஐ.டி பாரி கம்பெனியும், தோல்பதனிடும் தொழிற்சாலைகளும் பெரிய தொழில் நிறுவனங்களாகும். மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 224ன் கீழ் உரிமம் பெறாத நபர்களுக்கு நோட்டீஸ்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் நீதி மன்ற நடவடிக்கை ஏதும் இல்லை அறிக்கையாண்டில் கட்டணமாக ரூ.20,56,610/— வசூல் செய்யப்பட்டது. சென்ற ஆண்டில் ரூ.18,35,831/— வசூல் செய்யப்பட்டது.

### பொது சுகாதார சட்டம்

பொது சுகாதார சட்டத்தின் செயல்பாட்டின் கீழ் தொல்லைகள், சாக்கடை நீர் தெருவில் ஓடவிடுவது, மல அறைகள் இல்லாதிருத்தல், மல அறைகள் திருத்தி அமைத்தல் மற்றும் அச்சட்டத்தின் கீழ் தொல்லையாக பொது சுகாதாரத்திற்கு குந்தகம் விளைவிப்பதாக இருந்தவற்றைச் சரி செய்து நிவர்த்திக்க அறிவிப்புகள் கொடுத்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வினத்தின் கீழ் உரிமத் தொகை 1978ல் நிர்ணயம் செய்யப்பட்டது. 1996—1997ம் ஆண்டில் (1.4.96 முதல் இவ்வுரிமைத் தொகை திருத்தம் செய்து) உயர்த்திட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## உரக்கிடங்கு

இந்நகராட்சியில் உரக்கிடங்கு 1.56 ஏக்கர் மற்றும் மருதம்பாக்கம் கிராமம் கூட்டு உரக்கிடங்கு 10.82 ஏக்கர் விஸ்திரணத்தில் நகரின் வடக்கு பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. 2015—2016 ஆம் ஆண்டில் உரம் ஏதும் தயாரிக்கப்படவில்லை. அறிக்கையாண்டில் செலவு செய்யப்பட்ட விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. உரக்கிடங்கு மூலம் வருமானம் ஏதுமில்லை. துப்புரவு பணியாளர்கள் எவரும் இவ்வாண்டில் பயிற்சி பெறவில்லை. அறிக்கையாண்டில் மாதிரிகள் பகுப்பாய்விற்கு அனுப்பப்படவில்லை. சென்ற ஆண்டு இருப்பு 730 மெ.டன் தொடர்ந்து இருப்பில் இருந்து வருகிறது. நகரின் அருகாமையில் உரக்கிடங்கு அமைக்க உகந்த காலி இடம் கிடைக்காததால் வாலாஜா வட்டம் மருதம்பாக்கம் கிராமத்தில் உரக்கிடங்கு அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டு அவ்விடத்தில் திடக்கழிவுகள் சேகரிக்கப்பட்டு வருகிறது.

## 29. குடிநீர் விநியோகம்

இந்நகரில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. தலைமை நீரேற்று நிலையம் மற்றும் நகரின் குடிநீர் விநியோகம் நகராட்சியால் பராமரிக்கப் படுகிறது. அறிக்கையாண்டில் 235 ஒற்றைப்பொது குழாய் பராமரிக்கப்பட்டது. அறிக்கையாண்டில் மீட்டர் இல்லாத வீட்டு உபயோகத்திற்க்கான குழாய் இணைப்பு ஏதும் வழங்கப்படவில்லை. 948 வீட்டு குழாய் இணைப்புகள் மீட்டர் இன்றி அளவுமாணி மீட்டர் முறையிலும் மற்றும் வீட்டு உபயோகம் அல்லாத பிற காரியங்களுக்கும் 7158 இணைப்புகள் உள்ளன. அறிக்கையாண்டில் நாள் ஒன்றுக்கு 38.00 லட்சம் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு நபர் 1க்கு நாள் ஒன்றுக்கு 82.00லிட்டர் வீதம் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் தண்ணீர் வரியாகவும், கட்டணமாகவும் ரூ.36,69,842/— வசூல் செய்யப்பட்டது. செலவு செய்யப்பட்ட விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சி கட்டண நிதிக் கணக்கு ஏதும் பராமரிக்கவில்லை.

## 30. பாதாளச்சாக்கடை திட்டம்

தற்பொழுது திறந்தவெளி கால்வாய் திட்டத்தின் மூலம் சாக்கடைத் தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரியம் வேலூர் — திருவண்ணாமலை வட்டம் அவர்களின் கடிதம் எண்.41001/கோ/கழிவு நீர்/தொ.2/நாள் 4.10.2001ல் இந்நகரில் பாதாள சாக்கடை திட்டத்தை நடைமுறைப் படுத்த விவரங்கள் கோரப்பட்டன இந்த விவரங்கள் அனுப்பப்பட்டு மேற்படி திட்டத்தை அமுல்படுத்த ஆய்வு கட்டணம் ரூ.7.00லட்சம் இந்நகராட்சியால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், வேலூர் அவர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது.

## 31. பொது சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு பல வகைப்பட்டவைகள்

நாய்க்கடியினால் இவ்வாண்டில் எவரும் இறக்கவில்லை. அறிக்கையாண்டில் 1210 நாய்கள் கணக்கெடுக்கப்பட்டு அதில் 32 நாய்களுக்கு கருத்தடை செய்யும் பணி நடைபெற்றது. அவைகளுக்கு தொடர்ந்து கருத்தடை செய்யும் பணி நடைபெற்றது. பன்றிகளால் பரவும் மூளைக்காய்ச்சல் நோயால் எவரும் பாதிக்கப்படவில்லை. அறிக்கையாண்டில் பன்றிகள் ஏதும் சுட்டு அழிக்கப்படவில்லை. நகராட்சி எல்லைக்குள் பன்றிகள் வளர்ப்பவர்களுக்கு பொது சுகாதாரப்பிரிவின்கீழ் உரிய நோட்டீஸ் வழங்கப்பட்டு பன்றிகள் வளர்க்காத வண்ணம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நகராட்சி அலுவலகத்திலிருந்து அருகாமையில் தீயணைப்பு நிலையம் உள்ளது. இவ்வாண்டில் தீ விபத்துக்கள் ஏதும் ஏற்படவில்லை. மேலும் நகராட்சி அலுவலகத்தில் அனைத்து பிரிவுகளிலும் தீயணைப்பு கருவிகள் வைக்கப்பட்டுள்ளது.

**டெங்கு**

டெங்கு நோயை கட்டுப்படுத்தும் பணி அறிகை ஆண்டில் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டது, மேலும், அறிக்கையாண்டில் ''திறந்த வெளியில் மலஜலம் கழிப்பதை ஒழிக்கும் திட்டத்தின்'' கீழ் 371 வீடுகளில் அரசு மான்யத்துடன் கழிவறை கட்டிமுடிக்கப்பட்டுள்ளது,

**பிரதிபலன் தரத்தக்க வரவு இனங்கள்**

**32. பொது**

இவ்வினத்தின் கீழ் அறிக்கையாண்டின் வருமானம் ரூ.76,19,229/— முந்தைய ஆண்டின் வருமானம் ரூ.63,48,209/—

**33.சந்தைகள்,வண்டி நிலையம், பேருந்து நிலையம் மற்றும் ஆடு,மாடு அறுக்குமிடம் மற்றும் வரவுகள்:**

| ஆண்டு | கடைகள் உட்பட சந்தைகள் | பேருந்து நிலையம் | ஆடு மாடு அறுக்குமிடம் | கட்டணக் கழிப்பிடம் |
|---|---|---|---|---|
| 2016—2017 | ரூ.4843741/— | 6,69,600 /— | 468300/— | 310800/— |

**(அ). சந்தைகள்**

ஒரு தினசரி சந்தையும் ஒரு வாரச்சந்தையும் மற்றும் கடைகளும் இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. வாரச் சந்தை கால்நடைகளுக்கு சிறப்பு பெற்றது. இதன் மூலம் நகராட்சிக்கு கணிசமான வருவாய் கிடைக்கிறது.

**(ஆ). வண்டி நிலையம்**

இந்நகரில் வண்டி நிலையம் எதுவும் இல்லை

**(இ). பேருந்து நிலையம்**

மத்திய ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பேருந்து நிலையம் ஒன்று நகரில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் வருமானம் ரூ.6,69,600/— ஆகும். சென்ற ஆண்டின் வருமானம் ரூ.6,69,600/—

**(ஈ). ஆடு,மாடு அறுக்கும் தொட்டிகள்**

இந்நகரில் இவ்வாண்டில் தனிப்பட்டவரால் யாதொரு ஆடு,மாடு அறுக்கும் தொட்டிகள் நடத்தப்படவில்லை. இந்நகர்மன்றமே தொடர்ந்து ஒரு ஆடு அறுக்கும் தொட்டியும், ஒரு மாடு அறுக்கும் தொட்டியும் பராமரித்து வருகின்றது. ஆடு தொட்டியின் மூலம் அறிக்கை ஆண்டில் ரூ.4,68,300/— வசூல் ஆகியுள்ளது. சென்ற ஆண்டின் வசூல் ரூ.4,46,000/— ஆகும்.

(உ) இந்நகராட்சயில் இரண்டு நவீன கட்டண கழிப்பிடங்கள் கட்டி குத்தகைக்கு விடப்பட்டது. அறிக்கையாண்டில் வரவுரூ.3,10,800/—ஆகும். சென்ற ஆண்டில் வருமானம் ரூ.2,96,000/—

**(ஊ) தொழிற்சாலைகள், தொழில்கள்**

1400க்கும் மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்டு நடத்தப்படும், EID பாரிநிறுவனம் இந்நகரத்தின் மத்தியில் அமைந்துள்ளது. இந்நிறுவனத்தில் கந்தக அமிலம், பீங்கான் துப்புரவுப் பொருட்கள், ஜாடிகள் மற்றும் உரங்கள் தயாரிக்கப்படுகின்றன. இந்நகரில் சுமார் 80 தோல் பதனிடும் தொழிற்சாலைகளும் அதனை சார்ந்த சிறு தொழில் நிறுவனங்களும் உள்ளன. தோல் ஏற்றுமதியினால் ஏராளமாக அந்நிய செலவாணி கிடைக்கிறது.

**இராணிப்பேட்டை நகராட்சி**
**2016-17ல் செய்யப்பட்ட பணிகள்**
**கட்டிடங்கள்**

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ஐ.சி.டி.எஸ்.ம கட்டிடங்களுக்கு வண்ணம் அடித்தல், மின்வசதி மற்றும் இதர பணிகள் செய்தல் | ரூ.7,50,000/– |
| 2 | லம்பா காலனி சமுதாயக் கட்டிடத்திற்கு சமையலறை கட்டுதல் | ரூ. 3,00,000/– |
| 3 | 7 குடியிருப்பு பகுதியில் குடியிருப்பு எண். 31–ற்கு கழிப்பிட வசதி செய்தல் | ரூ. 50,000/– |
| | **மொத்தம்** | **ரூ. 11,00,000/–** |

**இராணிப்பேட்டை நகராட்சி**
**2016-17-ல் செய்யப்பட்ட பணிகள்**
**குடிநீர்பணிகள்**

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 1. | தலைமை நீரேற்று நிலையத்தில் 7.5 செ.மீ ஸ்டாட்டர், சுவிட்சுகள் சப்ளை செய்தல் | ரூ.2,50,000/– |
| 2. | வார்டு எண். 1,2,3 மற்றும் IVPM அருகில் உள்ள பகுதிகளுக்கு குடிநீர் வசதி செய்தல் | ரூ.1,25,000/– |
| 3. | வார்டு எண். 1 முதல் 30 பகுதிகளில் பழுதடைந்த பம்பிங் தெயின் மற்றும் பகிர்மான பைப் பழுது பார்த்தல் | ரூ.3,00,000/– |
| 4. | காரை நேரு நகர். காலை எல்.எப். ரோடு, முத்துக்கடை, பழைய பேருந்து நிலையம், அம்மன் கோயில் காலனி பகுதிகளில் உள்ள நம்ம டாய்லெட்டுக்கு குடிநீர் வசதி செய்தல் | ரூ.7,50,000/– |
| 5. | தலைமை நீரேற்று நிலையத்தில் 7.5 எச்.பி., 10 எச்.பி, 15எச்.பி மற்றும் 20 எச்.பி. மோட்டர்கள் பழுது பார்த்தல் | ரூ.5,00,000/– |
| 6. | வார்டு எண். 1 முதல் 30 வரையிலான பகுதிகளில் அமைந்துள்ள சிறுமின்விசை பம்புகள் பழுது பார்த்தல் | ரூ.10,00,000/– |
| 7. | வார்டு எண். 18 மாரியம்மன் கோயில் தெருவில் ஆழ்துளை கிணறுடன் கூடிய சிறுமின்விசை பம்ப் அமைத்தல் | ரூ.1,50,000/– |
| 8. | வார்டு எண். 20 ஏஜெண்ட் பெருமாள் தெருவில் ஆழ்துளை கிணறுடன் கூடிய சிறுமின்விசை பம்ப் அமைத்தல் | ரூ.1,50,000/– |
| 9. | வார்டு எண். 23 ஆடு அறுக்கும் தொட்டிக்கு ஆழ்துளை கிணறுடன் கூடிய சிறுமின்விசை பம்ப் அமைத்தல் | ரூ.1,50,000/– |
| 10. | வார்டு எண். 25 ஆஞ்சிநேயர் கோயில் தெருவில் ஆழ்துளை கிணறுடன் கூடிய சிறுமின்விசை பம்ப் அமைத்தல் | ரூ.1,50,000/– |
| 11. | வார்டு எண். 8 அம்மூர் ரோடு பகுதியில் ஆழ்துளை கிணறுடன் கூடிய சிறுமின்விசை பம்ப் அமைத்தல் | ரூ.1,50,000/– |
| 12 | வார்டு எண். 30 பிள்ளையார்கோயில் தெரு பின்புற பகுதியில் ஆழ்துளை கிணறுடன் கூடிய சிறுமின்விசை பம்ப் அமைத்தல் | ரூ.1,50,000/– |

| | | |
|---|---|---|
| 13 | வார்டு எண். 28 வாழக்கரை அம்மன் கோயில் பகுதியில் ஆழ்துளை கிணறுடன் கூடிய சிறுமின்விசை பம்ப் அமைத்தல் | ரூ.1,50,000/– |
| 14 | வார்டு எண். 28 கிருஷ்ணகிரி டிரங்க் ரோடு பகுதியில் ஏற்கனவே உள்ள கைபம்பில் சிறுமின்விசை பம்பு அமைத்தல் | ரூ.1,00,000/– |
| 15. | வார்டு எண். 1 மற்றும் 3–ற்கு IVPM OHT–லிருந்து குடிநீர் வசதி செய்தல் | ரூ.7,70,000/– |
| 16. | தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 250 கே.வி.ஏ. ஜெனரேட்டர் பராமரித்தல் | ரூ.1,25,000/– |
| 17. | வார்டு எண். 6 நவல்பூர் புதுத்தெருவிற்கு குடிநீர் வசதி செய்தல் | ரூ.50,000/– |
| 18 | வார்டு எண். 1 முதல் 30 வரையிலான பகுதிகளில் அமைந்துள்ள பழுதடைந்த சுலீஸ் வால்வுகளை சரி செய்தல் | ரூ.2,00,000/– |
| 19. | வார்டு எண். 8 மாந்தாங்கள் மோட்டூர் பஜனை கோயில் தெருவிற்கு குடிநீர் பகிர்மான பைப் அமைத்தல் | ரூ.1,00,000/– |
| 20 | வார்டு எண். 5 நவல்பூர் கிரேட் நகர் பகுதிக்கு குடிநீர் பகிர்மான பைப் அமைத்தல் | ரூ.1,75,000/– |
| 21 | வார்டு எண். 19 காரை புதுத் தெருவிற்கு குடிநீர் விநியோக பகிர்மான பைப் பதித்தல் | ரூ.50,000/– |
| 22. | தலைமை நீரேற்று நிலையத்திலுள்ள 50 எச்.பி சென்ட்ரி பியூசல் பம்ப் பராமரித்தல் | ரூ.3,20,000/– |
| 23 | தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மோட்டார் பம்ப்செட் மற்றும் பேனல் போர்டு பழுதுபார்த்து பராமரித்தல் | ரூ.5,00,000/– |
| 24 | சியோன் நகர் பகுதியில் சுலீஸ் வால்வு பொருத்துதல் மற்றும் பாலு தியேட்டர் பகுதி பின்புறம் மற்றும் இரயில்வே ஸ்டேஷன் ரோடு பகுதியில் குடிநீர் பகிர்மான பைப்பதித்தல் | ரூ.1,50,000/– |
| 25 | வார்டு எண். 3–ற்கு புதியதாக PVC பைப் லைன் பதித்தல் | ரூ.7,63,000/– |
| 26. | வார்டு எண். 7 கோல்டன் நகர் பகுதியில் குடிநீர் பகிர்மான பைப் பதித்தல் | ரூ.1,50,000/– |
| | **மொத்தம்** | **ரூ.74,28,000/–** |

**இராணிப்பேட்டை நகராட்சி**
**2016-17-ல் செய்யப்பட்ட பணிகள்**
**சாலைகள்**

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 1 | பெரியார் மார்க்கெட் பகுதியில் சிமெண்ட் தளம் மற்றும் கால்வாய் அமைத்தல் | ரூ. 21,00,000/– |
| 2 | வார்டு எண். 18 காரை மாரியம்மன் கோயில் தெரு சிறுபாலம் மற்றும் சிமெண்ட் சாலை பழுது பார்த்தல் | ரூ.2,65,000/– |
| 3 | வார்டு எண். 19 காரை சுடுகாட்டு சாலைக்கு தார்தளம் அமைத்தல் | ரூ.7,50,000/– |
| 4 | வார்டு எண். 17 காரை சுடுகாட்டு சாலைக்கு தார்தளம் அமைத்தல் | ரூ.9,95,000/– |
| 5. | ஆர்ஆர்.ரோடு , கெல்லீஸ்ரோடு, வண்டி மேட்டுத் தெரு மற்றும் காரை ஆர்.டி.ஓ. அலுலவலக பின்புற சாலைகளை பராமரித்தல் | ரூ.7,50,000/– |
| 6. | வண்டி மேட்டுத் தெருவிற்கு தார் சாலை அமைத்தல் | ரூ.8,00,000/– |

| | | |
|---|---|---|
| 7. | காரை மசூதி தெரு, பெரியார் நகர், குறுக்குத் தெரு, கிரேஸ்பள்ளிகுறுக்குத் தெரு, எஸ். ஆர்.பி. நகர், காரை எல்.எப். ரோடு, பழைய திருத்தணி ரோடு, சீனிவாசன்பேட்டை தோப்புத் தெரு, கெல்லீஸ் ரோடு, ஆதிதிராவிடர் பள்ளி பின்புறம் மற்றும் ராமர் கோயில் தெரு பகுதியில் சிமெண்ட் தளம் மற்றும் கால்வாய் அமைத்தல | ரூ. 150,00,000/– |
| 8. | அம்மன் கோயில் காலனி , குடோன் தெரு, மஹாவீர் நகர், வக்கீல் தெரு மற்றும் சங்கர் நகர் பகுதியில் சிமெண்ட் தளம் மற்றும் கால்வாய் அமைத்தல். | ரூ.150,00,000/– |
| | **மொத்தம்** | **ரூ. 3,56,60,000/–** |

**இராணிப்பேட்டை நகராட்சி**
**2016-17-ல் செய்யப்பட்ட பணிகள்**
**நிர்வாகம்**

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 1 | நகராட்சிக்கு சொந்தமான பூங்கா பகுதிகளில் சீமை கருவேல மரங்களை அகற்றுதல் | ரூ. 1,00,000/– |
| 2. | நகராட்சி அலுவலகத்தில் R.O. Plant அமைத்தல் | ரூ.80,000/– |
| 3. | புதிய அலுவலக கட்டிடத்தின் முன்புற பகுதியில் தோட்டம் அமைத்தல் | ரூ.9,50,000/– |
| | **மொத்தம்** | **ரூ. 11,30,000/–** |

**இராணிப்பேட்டை நகராட்சி**
**2016-17-ல் செய்யப்பட்ட பணிகள்**
**கழிப்பிடங்கள்**

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 1 | முத்துக்கடை சந்திப்பில் உள்ள நவீன கட்டண கழிப்பிடம் பழுது பார்த்தல் | ரூ. 2,00,000/– |
| 2. | நகராட்சி பொதுக்கழிப்பிடங்கள் பழுது பராமரித்தல் | ரூ.2,85,000/– |
| | **மொத்தம்** | **ரூ.4,85,000/–** |

**இராணிப்பேட்டை நகராட்சி**
**2016-17-ல் செய்யப்பட்ட பணிகள்**
**கால்வாய்கள் மற்றும் சிறுபாலங்கள்**

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 1 | வார்டு எண். 9 ஓட்டேரி பகுதியில் சிறுபாலம் கட்டுதல் | ரூ. 60,000/– |
| 2. | வார்டு எண். 25 வேலு தெரு மற்றும் ஆஞ்சிநேயர் தெருவில் கால்வாய் கட்டுதல் | ரூ. 1,50,000/– |
| 3. | வார்டு எண். 7 நவல்பூர் ஒத்தவாடைத் தெரு சந்திற்கு கால்வாய் கட்டுதல் | ரூ. 1,50,000/– |
| 4. | ஆசிரியர் காலனி முதல் தெரு மற்றும் கடைசி தெருவிற்கு கால்வாய் அமைத்தல் | ரூ. 2,00,000/– |
| 5. | நகராட்சி முஸ்லீம் பெண்கள் துவக்கப்பள்ளி அருகில் சிறுபாலம் அமைத்தல் | ரூ.50,000/– |
| 6 | வார்டு எண். 19 மாரியம்மன் கோயில் பின்புறம் மற்றும் | ரூ.2,50,000/– |

| | | |
|---|---|---|
| | சுடுகாட்டு சாலை சந்திப்பு வரை மழைநீர் வடிகால்வாய் கட்டுதல் | |
| 7 | வசந்தம் அவென்யூ 6 மற்றும் 7–வது குறுக்குத் தெரு மற்றும் பெரியார் நகர் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | ரூ. 9,95,000/– |
| | **மொத்தம்** | **ரூ. 18,55,000/–** |

## 36 வறுமை கோட்டிற்கு கீழ் அங்கீகரிக்கப்பட்ட குடிசை பகுதிகளின் விவரம்

| வ.எண் | மொத்த மக்கள் தொகை 2011 கணக்கெடுப்பின் படி | மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை | வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | 50764 | 12275 | 3067 | 25% |

இந்நகரில் வறுமைக் கோட்டிற்கு கீழ் மக்கள் அதிகமாக வாழும் குடிசைப்பகுதிகள் உள்ளன. இதில் அங்கீகரிக்கப்பட்ட குடிசைப்பகுதிகள் 11 ஆகும். விவரம் பின்வருமாறு.

1. காரை நேரு நகர்
2. அம்பேத்கர் நகர்
3. ஓட்டேரி காலனி
4. காரை காலனி
5. ஏரிக்கரை காலனி
6. பிஞ்சி காலனி
7. அம்மன் கோயில் காலனி
8. லம்பா காலனி
9. இரயில்வேஸ்டேஷன்காலனி
10. சீனிவாசன்பேட்டை காலனி
11. ஜெயராம்பேட் காலனி

## 37. வறுமை கோட்டிற்கு கீழ் அங்கீகரிக்கப்படாத குடிசைப் பகுதிகளின் விவரம

1) எம்.ஜி.ஆர். நகர்

2) கே.கே.நகர்

3) பாலு தியேட்டடர் பின்புறம்

அறிக்கை ஆண்டில் “அனைவருக்கும் வீடு வழஙகும் திட்டத்தின்” கீழ் கச்சா வீடுகளை கான்கிரீட் வீடுகளாக மாற்றும் பணி குடிசை மாற்றுவாரியத்தின் மூலம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது.

## 38. நில அபிவிருத்தி (முழுமைத்திட்டம்)

இராணிப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதியினை உள்ளூர் திட்டப்பகுதியாக 1971ம் ஆண்டு நகர் ஊரமைப்பு சட்டப்பிரிவு 10(4)ன் கீழ் அறிவிக்கப்பட்டு இப்பகுதிக்கான முழுமைத் திட்டம் தயாரிக்கப்பட்டு தமிழ்நாடு அரசு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அரசாணை எண். 180 நாள் 20.2.90ல் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி முழுமைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.2000–2001ம் ஆண்டில் மறு ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு மறு ஆய்வு அறிக்கை உள்ளூர் திட்டக்குழுமம் ஒப்புதல் பெற்று அரசின் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்டுள்ளது. நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 28ன்கீழ் இராணிப்பேட்டை உள்ளூர் திட்டக்குழும விதிக்கான மறு ஆய்வு முழுமை திட்டத்திற்கு அரசு ஆணை எண்.26, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்:7.2.2005 மூலம் அரசு ஒப்புதல் வழங்கி உள்ளது. மேலும் மேற்படி அரசாணையினை நகரமன்றம் தனது தீர்மான எண்.84 நாள்:27.7.2005ல் ஒப்புதல் வழங்கி உள்ளது. ஒப்புதல் பெறப்பட்டுள்ள அரசாணையினை விதி  15ன்படி மாவட்ட அரசிதழ் மற்றும் செய்தித்தாளில் விளம்பரப்படுத்தப்பட உள்ளதைத் தொடர்ந்து, தினத்தந்தி (25.8.2005) நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. மேலும் மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 39. விரிவான மேம்பாட்டு திட்டங்கள்

இராணிப்பேட்டை உள்ளூர்திட்ட குழுமத்தின் 18.10.77ந் தேதிய தீர்மானம் எண். 2ல் உள்ளூர் திட்ட பகுதியில் பின்வரும் ஐந்து விரிவு மேம்பாட்டுத் திட்டங்களை விளம்பரம் செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**ஏக்கர்**

1.விரிவான மேம்பாட்டு திட்டம் எண். 1(அங்கீகரிக்கப்பட்டது)எண்.1 .. 91.27
2. விரிவான மேம்பாட்டு திட்டம் எண்.2.(அங்கீகரிக்கப்பட்டது)எண்.2 .. 115.50
3. விரிவான மேம்பாட்டு திட்டம் எண்.1.(அங்கீகரிக்கப்பட்டது)எண்.3 .. 110.33
4. விரிவான மேம்பாட்டு திட்டம் எண்.1.(அங்கீகரிக்கப்பட்டது)எண்.4 .. 140.00
5. விரிவான மேம்பாட்டு திட்டம் எண்.1.(அங்கீகரிக்கப்பட்டது)எண்.5 .. 137.92

## 40. திட்டங்களின் நிலை

விரிவு மேம்பாட்டு திட்டம் எண்.1 உள்ளூர் பகுதி அடர்த்தியான குடியிருப்பு கட்டிடங்களை கொண்டுள்ள பகுதிகளாக இருப்பதினாலும், மேம்பாடுகள் அமுல்படுத்த சாத்தியம் இல்லாத பகுதிகளாக இருப்பதாலும் மேற்படி திட்டம் எண். 1ஐக் கைவிட இவ்வுள்ளூர் திட்டகுழுவின் 30.3.88ம் தேதிய தீர்மான எண். 34ல் தீர்மானிக்கப்பட்டது. வேலூர் நகர் மற்றும் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்கள் 12.7.93ம் தேதிய கடிதத்தில் திட்டம் 1ல் அமுல் செய்யும்படி தெரிவித்துள்ளார். (ந.க.2624/92/வேம3) நில உரிமையாளர்கள் கூட்டம் கூட்டி துணை இயக்குநர், வேலூர் மூலம் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் நகர் ஊரமைப்புச் சட்டம் 1974 பிரிவு 25ன் கீழ் இணக்கம் அளித்துள்ளார்.

நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் செயல் முறை உத்திரவு எண். 2760/95/பி3 நாள் 1.12.95ல் மேற்படி விரிவு மேம்பாட்டு திட்ட இணக்கம் அளிக்கப்பட்ட விவரத்தினை படிவம் 9ன்படி தினமலர் தினசரி நாளிதழில் 13.1.96ம் தேதி விளம்பரம் செய்யப்பட்டது. அரசு இதழில் பிரசுரம் செய்யப்பட்டது. நகர ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் செயல் முறை உத்திரவு ந.க.எண்.36605/97பி3, நாள் 20.11.97ல் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

நகர் விரிவு மேம்பாட்டு திட்டம் எண்.1—ஐ நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 33(1)ன்கீழ் மறு ஆய்வு மேற்கொண்டு அரசின் இணக்கத்திற்கு அனுப்பவேண்டிஇ நகர் ஊரமைப்புத்துணை இயக்குநர், வேலூர் அவர்களின் கடித ந.க.எண்.918/02/வேம நாள்:5.5.2003ம் தேதிய கடிதத்துடன் திட்டம் சம்மந்தமான அட்டவணை மற்றும் வரைபடங்களுடன், உள்ளூர் திட்டக்குழும தீர்மான எண்.2, நாள்:25.9.2003ல் தீர்மானத்துடன், நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர், வேலூர் அவர்களுக்கு அனுப்பிவைத்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விரிவு அபிவிருத்தி திட்டம் 1—க்கு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 33(1)ன்கீழ் ஒருங்கிணைந்த வரைவு திட்ட மாற்றத்திற்கான உள்ளூர் திட்டக்குழுமம் தீர்மானம் கேட்டு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் அவர்களின் கடித ந.க.எண்.918/02 வேம3 நாள்:7.12.09ல் கேட்டுக்கொண்டதற்கிணங்க இவ்வலுவலக உள்ளூர் திட்டக்குழும தீர்மான எண்.2 நாள்:26.4.2010ல் தீர்மானத்துடன் இவ்வலுவலக கடித ந.க.எண்.2602/03/எப்1 நாள்:2.5.2010ல் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் அவர்களுக்கு அனுப்பி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 41. விரிவான மேம்பாட்டு திட்டங்கள் 2 மற்றும் 3

நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்கள் தன்னுடைய 26.2.92ம் தேதிய ந.க.எண். 43379/91/டிபி2 மற்றும் 43377/91டிபி ஆகிய உத்திரவுகளில் மேற்படி திட்டங்களுக்கு தன் இணக்கத்தினை அளித்துள்ளார்கள். அதன்மீது

சட்டவிதி 27(1)ன்படி இந்த திட்டங்களை மாநில அரசிதழிலும், உள்ளூர் தினசரியிலும் விளம்பரம் செய்து ஆட்சேபனைகள் அல்லது ஆலோசனைகள் கோரப்பட்டது.விளம்பரம் செய்யப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் ஆட்சேபனைகளோ அல்லது ஆலோசனைகளோ வராமையினால் உள்ளூர் திட்டக்குழுமம் தன் 7.12.93ம் தேதியில் மேற்படி திட்டங்களுக்கு அங்கீகாரத்திற்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் வேலூர் அவர்கள் மூலமாக நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை, அவர்களுக்கு அனுப்பப்பட்டது. வேலூர் துணை நகரமைப்பு இயக்குநர் அவர்கள் தன்னுடைய 5.3.93ந் தேதிய ந.க.எண். 1530/97/வேம3 கடிதத்தில் மேற்படி திட்டங்களைப் பரிந்துரை செய்து சென்னை நகர் ஊரமைப்பு இயக்குநரின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பித்துள்ளார். இயக்குநர் அவர்கள் தன்னுடைய ந.க.எண். 43378/91டிபி2 நாள் 22.11.93 மற்றும் ந.க.43379/91/டிபி2, நாள் 22.11.93 தேதிய உத்திரவுகளில் திட்டங்கள் எண்.2 மற்றும் 3க்கு அங்கீகாரம் அளித்துள்ளார்கள். இந்த அங்கீகாரங்களை அரசிதழிலும் மற்ற அலுவலகங்களிலும் விளம்பரம் செய்யப்பட்டது. ஆகவே மேற்படி திட்டங்கள் நடைமுறையில் இருந்து வருகின்றன. விரிவான அபிவிருத்தி திட்டம் 3—க்கு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 33(1)ன்கீழ் ஒருங்கிணைந்த வரைவு திட்ட மாற்றத்திற்காக உள்ளூர் திட்டக்குழும தீர்மானம் எண் ழூகட்டு, நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் வேலூார் அவர்களின் கடித ந.க.எண்.1863/01 வே.ம.3 நாள்:9.6.2009ல் கேட்டுக்கொண்டதற்கிணங்க இவ்வலுவலக உள்ளூர் திட்டக்குழும தீர்மான எண்.1 நாள்:26.4.2010ல் தீர்மானத்துடன் இவ்வலுவலக கடித ந.க.எண்.1134/2010/எப்1 நாள்:3.5.2010ல் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூார் அவர்களுக்கு அனுப்பி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 42.விரிவான மேம்பாட்டு திட்டங்கள் 4 மற்றும் 5

நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்கள் தன்னுடைய 23.3.92ம் தேதிய ந.க.எண். 43376/91/டிபி1 மற்றும் 43377/91டிபி ஆகிய உத்திரவுகளில் மேற்படி இரண்டு திட்டங்களுக்கு தன் இணக்கத்தினை அளித்துள்ளார்கள். அதன்மீது சட்டவிதி 27(1)ன்படி இந்த திட்டங்களை மாநில அரசிதழிலும், உள்ளூர் தினசரியிலும் விளம்பரம் செய்து ஆட்சேபனைகள் அல்லது ஆலோசனைகள் கோரப்பட்டது.விளம்பரம் செய்யப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் ஆட்சேபனைகளோ அல்லது ஆலோசனைகளோ வராமையினால் சென்னை நகர் ஊரமைப்பு இயக்குநரின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்க தேவையான வரைபடங்கள், ஷெட்யூல்கள் மற்றும் நமுனாக்கள் தயாரித்து இயக்குநர் அவர்களுக்கு இவ்வலுவலக ந.க.எண். 5653/78எப்2 நாள் 9.12.93 தேதியில் சமர்பிக்கப்பட்டு இயக்குநர் அவர்கள் ந.க.எண். 43377/91/டிபி3 நாள் 19.1.95 மற்றும் ந.க.எண்.30277/92டிபி2, நாள் 21.2.94ல் அங்கிகாரம் அளித்துள்ளார்கள். இந்த அங்கிகாரங்களை அரசிதழிலும் மற்ற அலுவலகங்களிலும் விளம்பரம் செய்யப்பட்டது. ஆகவே மேற்படி திட்டங்கள் நடைமுறையில் இருந்து வருகின்றன.

விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.5க்கு வேலூார் நகர் ஊரமைப்புத்துணை இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.155/02 நாள்:16.3.2005ல் மேற்படி திட்டத்தினை ஒருங்கிணைத்து மறு ஆய்வு இணக்கத்திற்கு சமர்ப்பிக்கும் பொருட்டு, உள்ளுார் திட்டக்குழும தீர்மானம் எண்.1 நாள்:6.4.2005ல் ஒப்புதல் பெற்று வேலூார் நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. பின்னர், நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.5ஐ நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 33(1)ன்கீழ் இறுதி ஒப்புதல் அளித்து தனது செயல்முறை உத்திரவு ந.க.எண்.5269/02/டிபி1 நாள்:2.4.2007ல் ஒப்புதல் வழங்கியுள்ளார். மேற்படி செயல்முறை உத்திரவினை தமிழ்நாடு அரசிதழில் விளம்பரம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 43.நில ஆக்கிரமங்களின் விவரம்

| | | |
|---|---|---|
| 1.ஆண்டு ஆரம்பத்தில் நிலுவை, தற்காலிகமாக ஆக்கிரமிப்புகள் | .. | இல்லை |
| 2. 2015—2016—ல் பதிவு செய்யப்பட்ட தற்காலிக ஆக்கிரமிப்புகள் | .. | 70 |
| 3. முடிக்கப்பட்டவைகளின் எண்ணிக்கை | .. | 70 |
| அ).வருட உரிமையாணை அளிக்கப்பட்டவைகள் | .. | —— |
| ஆ). குத்தகைக்கு விடப்பட்டவைகள் | .. | —— |

இ). நிலப்பிராதீனம் செய்யப்பட்டவைகள் .. --
4. வருட முடிவில் நிலுவையிலுள்ள நில ஆக்கிரமிப்புகள்எண்ணிக்கை --

அவ்வப்போது ஏற்படும் ஆக்கிரமிப்புகள் உரிய நடவடிக்கை எடுத்து அகற்றப்படுகிறது.

**44. இதர பயன்தரும் திட்டங்கள்**

அ).கால்நடைப்பட்டி ஏதுவும் இந்நகராட்சியால் பராமரிக்கப்படவில்லை
ஆ)விளக்கெரியும் திட்டங்கள் எதுவும் இந்நகராட்சியால் பராமரிக்கப்படவில்லை
இ).குறைந்த வருவாய் உள்ளோர்களின் வீடுகட்டும் திட்டத்தின் கீழ் இதுவரை நகராட்சி 7குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டு அவைகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளன.

**பொது வருவாய்கள்**

**45. வருவாய்க்கணக்கு**

கீழக் காணும் விகிதப்படி அரையாண்டு சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது.
(அரையாண்டு வாடகை மதிப்பின் விகிதம் (%)

1. பொதுக் காரியம் : 2 1/2%
2. குடிநீர் வழங்கள் மற்றும் சாக்கடைகள் : 4%
3. விளக்கு : 2%
4. கல்வி : 2 1/2%
5. பொதுசுகாதாரம் : 2%

**காலிமனை வரி**

1. பொது காரியங்கள் : 1/2%
2. குடிநீர் வழங்கள் : 1/8%
3. பொதுசுகாதாரம் : 1/16%
4. விளக்கு :1/16%

3/4%

**46.தொழில் வரி**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.11 நாள்:12.1.99ன்படி ஒவ்வொரு ஐந்தாண்டிற்கு ஒருமுறை தொழில்வரி உயர்த்திட வேண்டியதால் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.38714/2008/ஆர்1 எண்ணிட்ட 13.8.2008ந் தேதிய சுற்றறிக்கையின்படி தற்போது வசூலிக்கப்பட்டு வரும் தொழில்வரியில் 25%க்கு குறையாமலும், 35%க்கு மிகாமலும் உயர்த்திட தெரிவிக்கப்பட்டதைத்தொடர்ந்து நகரமன்ற தீர்மானம் எண்.1079 நாள்:27-9-2013ன்படி 1.10.2013 முதல் 25% உயர்வு செய்ய தீர்மானிக்கப்பட்டு 2013-2014 இரண்டாம் அரையாண்டு முதல் வசூலிக்கப்பட்டு வருகிறது.

| எண். | 6 மாத ஊதியம் | 2014-2015 இரண்டாம் அரையாண்டு முதல் |
|---|---|---|
| 1. | ரூ.21000/- வரை | தொழில்வரியில்லை |
| 2. | ரூ.21000/- அல்லது அதற்கதிகமாக ஆனால் ரூ.30000/-க்கு குறைவாக | ரூ. 118.00 |
| 3. | ரூ.30001/- அல்லது அதற்கதிகமாக ஆனால் ரூ.45000/-க்கு குறைவாக | ரூ.298.00 |

| | | |
|---|---|---|
| 4. | ரூ.45001/— அல்லது அதற்கதிகமாக ஆனால் ரூ.60000/—க்கு குறைவாக | ரூ.586.00 |
| 5. | ரூ.60001/— அல்லது அதற்கதிகமாக ஆனால் ரூ.75000/—க்கு குறைவாக | ரூ.882.00 |
| 6. | ரூ.75001/— அல்லது அதற்கு அதிகமாகவும் | ரூ.1172.00 |

**47. வரி இனம், வரியில்லாத இனங்களின் கேட்பு, வசூல், நிலுவைப் பட்டியல்**

| இனங்கள் | மொத்த கேட்பு | வசூல் | நிலுவை | வசூல் சதவீதம் |
|---|---|---|---|---|
| சொத்துவரி | 414.53 | 266.81 | 147.72 | 64% |
| தொழில்வரி | 67.26 | 43.64 | 23.62 | 65% |
| குடிநீர் கட்டணம் | 109.06 | 36.47 | 72.59 | 33% |
| வரியில்லா இனம் | 130.39 | 68.95 | 61.44 | 53% |
| மொத்தம் ரூ. | 721.24 | 415.87 | 305.37 | 57.66% |

## நிதி நிலைமை

**48. பொதுக் கணக்கு வரவு செலவு விவரங்கள்**

அறிக்கை ஆண்டில் ஒவ்வொரு கணக்குத் தலைப்பின் கீழுள்ள ஆரம்ப நிலுவைகளும் முடிவு நிலுவைகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| நிதியின் விவரம் | ஆரம்ப இருப்பு | முடிவிருப்பு |
|---|---|---|
| பொதுநிதி | 72,50,74,888/— | 3,07,14,992/— |
| கல்விநிதி | 6,29,56,068/— | 13,08,657/— |
| குடிநீர் நிதி | 34,08, 13,762/— | 39,28,355/— |

**49. சாதாரண வருமானம்**

சாதாரண கணக்கின் கீழ் சென்ற ஆண்டு மற்றும் நடப்பாண்டு வருமானம் தனியாக வழங்க இயல வில்லை. கீழ் குறிப்பிட்டுள்ளவாறு அரசாங்க மானியங்களுடன் உதவித் தொகைகளும் இவ்வாண்டில் பெறப்பட்டது.

1. கல்வி மான்யம் 37வது பிரிவின்படி : இல்லை
2. பள்ளி பராமரிப்பு 37வது மான்யம் : இல்லை
3. பற்றாக்குறை மான்யம் : இல்லை
4. பள்ளிகட்டிடம் கட்டுவதில் மான்யம் : இல்லை
5. சாலை பராமரிப்பு ஈட்டுத் தொகை : இல்லை
6. சாலை நஷ்டஈடு மான்யம் மற்றும் உரிமையாணை : இல்லை
7. கேளிக்கை வரி : ——
8. தாய்சேய் நல விடுதி மான்யம் இல்லை
9. முத்திரைதாள் விற்பனை மூலம் மான்யம். : 39,85,035
10. மலேரியா மான்யம் : இல்லை
11. சாலை வேலைகளுக்கு முழு கடன் திட்டத்தின் கீழ் : இல்லை
12. முத்திரை தீர்வின் மீது விற்பனை வரியில் பங்குத் தொகை : இல்லை
13. வெள்ள நிவாரண மான்யம் (சாலை ) : இல்லை
14. தேர்தல் செலவு மான்யம் : இல்லை
15. நீதி மன்ற மான்யம் : இல்லை
16. ஆதி—திராவிடர் நலம் ஈமச்சடங்கு மான்யம் : 2,97,500

**50. மூலதன செலவினம்**

இவ்வறிக்கை ஆண்டில் பொதுக் கணக்கில் மூலதன செலவினம் ரூ.6,06,94,511/— செலவிடப்பட்டது.கடந்த ஆண்டில் ரூ.7,18,38,968/— ஆகும்.

**51. கடன்கள்**

அறிக்கை ஆண்டில் ஆரம்பத்தில் ரூ.18,54,00,000/— கடன் தொகை நிலுவையாக இருந்தது. நடப்பு ஆண்டில் கீழ்கண்டுள்ளவாறு கடன் தொகை பெறப்பட்டுள்ளது. அறிக்கை ஆண்டில் கடன்கள் அசல் (ம) வட்டி ரூ.3,01,40,900/—

**52. சிறு சேமிப்பு**

அறிக்கை ஆண்டில் சிறுசேமிப்பு இலக்கு ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை

**53. தணிக்கை**

அறிக்கையாண்டில் ஆரம்பத்தில் இருந்த ஆட்சேபணைகளின் எண்ணிக்கை 821 ஆகும். அறிக்கையாண்டில் தணிக்கை கூட்டமர்வு ஏதும் நடைபெறவில்லை.

**54. இருப்பும் பொறுப்பும்**

இந்நகராட்சிக்கு 31.3.2016—ம் தேதியில் இருந்த இருப்பும் பொறுப்பும் குறித்த தகவல் பட்டியல் வருடாந்திர கணக்குகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.

அறிக்கையாண்டில் வரி மற்றும் வரியில்லாத இனங்களில் மொத்த வசூல் 59% இதில் சொத்துவரி 69% வரியில்லா இனங்கள் 64% ஆகும்.

**பொது குறிப்பு**

இராணிப்பேட்டை நகராட்சியில் பொதுமக்களின் அடிப்படை வசதிகளான குடிநீர், சாலைவசதி, தெருவிளக்கு பராமரிப்பு நகரமைப்பு திட்ட பணிகள் வருவாய் பிரிவில் நடைபெறும் பணிகள் மற்றும் பொது சுகாதார பணிகள் சீரான முறையில் செய்ய முழு ஒத்துழைப்பு நல்கியதற்கு இந்நகராட்சி நிர்வாகத்திற்கு ஆணையாளருடன் எல்லா வகையிலும் ஒத்துழைப்பு நல்கிய மேலாளர், கணக்கர், நகராட்சி பொறியாளர், உதவி பொறியாளர், துப்புரவு ஆய்வர்கள், நகரமைப்பு ஆய்வர்கள், வருவாய் ஆய்வர் மற்றும் அனைத்து பணியாளர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றியினை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையாளர்(பொ),
இராணிப்பேட்டை நகராட்சி.

நகராட்சி அலுவலகம்,
இராணிப்பேட்டை.
நாள் 04.07.2016.